ஆழி சர்வதேச தமிழிலக்கிய ஆய்விதழ்
Aazhi International Journal of Tamil Literature Studies
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
E-ISSN: 2583-7931
OPEN ACCESS

# Devices used in Paripaadal

# பரிபாடலில் கருவியம்

Dr. T. Nellaiyappan
*Associate Professor, School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai, India*

**முனைவர் தி. நெல்லையப்பன்**
*இணைப்பேராசிரியர், தமிழியற்புலம், மதுரை காமராசர், பல்கலைக்கழகம், மதுரை, இந்தியா*

***Article Info:***

Received 05-12-2022 | Accepted 04-01-2023 | Published 31-01-2023
Volume 01 Issue 01 January 2023 | Page No : 04-07

**ABSTRACT**

Paripaadal is the only Sangha literature which is not a set of lessons. In this, the literature is based on Tirumal, Chevvel and Vaiyai. The poets Nallanthuvanar, Yugaperuvalhuthiyar, Kaduvan Ilaveinanar, Keeranthaiyar, Kunram Bhootanar, Kesavanar, Nappannanar, Nallachuthanar, Nallalusiyar, Nallethiyar, Nalvalhuthiyar, Maiodak Govanar have sung songs. The title "Akuriyam" has been taken in Paripaadal in order to reveal what instruments have been symbolized by the poets and to what extent all these instruments have added a bulwark to the leaders of the music or singing.

***Keywords:***

*Conch, wheel, Vel, Valvalla, Kudi, Vacchiram, Roll, Todi, Erani, Float, Thudi, Madhikai, Steel, Aikol, Kattuvadam, Kalazhi, Nanjil, Valampuri, Nemi, Vali, Poon, Dhoompu, Lukaruval, Mozvu, Bulakol*

## முன்னுரை

எட்டுத் தொகை நூல்களில் அகம், புறம் என்ற இலக்கிய வகை நிலையில் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அகப்புறம் கலந்த நிலையிலும் தொகைநூலில் பாடல்களைப் புனைந்து பார்த்துள்ளனர். அந்த வகையில் எண்ணத்தக்க நூல்தான் பரிபாடல் குறிஞ்சிக்குரிய கடவுளான முருகன் செவ்வேள் என்று அடையாளப்படுத்தப்பட்டு பாடல்கள் புனையப்பட்டுள்ளன. காத்தல் கடவுளான திருமால் முல்லைக்குரிய தெய்வம் என்பதால் அதற்குரிய அடையாளப்பாட்டையும் அவர்தம் அவதாரப் பெருமைகளையும் உணர்த்திச் சென்றுள்ளனர். வையை மதுரையின் உயிர்ப்பாய் அமைந்துள்ளதால் அந்த நதியின் செயல்பாட்டையும் பெருமையையும் பதிவு செய்து பாடல்கள் புனைந்துள்ளனர் என்பதாலும் அப்பதிவுகளில் பாடுபொருண்மைக்கு ஏற்ப புலவர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருவிகள் குறித்து அறிந்துகொள்ளும் நோக்கில் இக்கட்டுரையாக்கம் உருவாகியுள்ளது.

## திருமால் பாடல்களில் கருவிகள்

கருவிகள் பொதுவாக, ஆயுதம், உபகரணம், சித்திரம், உட்கருவி, புறக்கருவி, நிறையறி கருவி, குதிரைக்கல்லளை, வாச்சியம், பஞ்ச கருவி, தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி, வீணைக் கருவி, கருவி காண்டம், ஆயுதவுறை, சாதனம், கேடகம், ஆடை, ஓவியம், அணிகலன், துணைக்காரணக் கருவிகள் என வகைப்படுத்துகிறது அகராதி.

பரிபாடலில் ஏழு பாடல்களில் திருமால் குறித்து இடம்பெற்றுள்ளன. திருமாலே முழுமுதற் கடவுள் என்ற பெருமையைப் பேசுகிற. திருமால் எல்லாப் பொருள்களிலும் இருக்கின்றார். எல்லா தெய்வங்களாகவும், எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கின்றார். அவரே மும்மூர்த்தியாகவும் இலங்குகின்றார் என்பதை முதற்பாடல் அறிவிக்கின்றது. இதில் 'வால்வளை'[1] என்னும் வெண்சங்கு, 'பூண்'[2] - அணிகலம், 'நேமி'[3] என்னும் சக்கரம் ஆகிய கருவிகள் மொழியப்பட்டுள்ளன. இவை திருமாலுக்குரிய உருவப் புனைவில் அமைந்தவையாக உள்ளன.

கீரந்தையார் பாடலில் திருமாலின் ஊழிக்காலத்து நிகழ்வாக்கங்களை வெளிப்படுத்தியுள்ளார். திருமாலின் சிறப்பு மொழியப்பட்டுள்ளது. நிலமகளை மணந்த நிகழ்வும் சங்கு சக்கரத்தின் பெருமைகள் உரைக்கப்பட்டுள்ளன. திருமாலின் உருவச் சிறப்பில் அமைந்த பண்புகள் பாராட்டப்பட்டுள்ளன. வேள்வியின் நாயகனாய் இலங்கும் தன்மை பாடப்பட்டுள்ளது. அதனால் திருமாலை வாழ்த்தவும் அவனிடத்தில் சில வேண்டுதல்களையும் வைத்துப் பாடிய பாட்டில் 'ஆழி'[4] என்னும் சக்கரம், 'வளை'[5] என்னும் சங்கு என்பன போன்ற கருவிகளை மொழிந்து அவை திருமாலின் உருவப் பண்போடு அமைந்த தத்துவ நெறியையும் எடுத்துரைத்துள்ளமை அறியத்தக்கது.

கடுவன் இளவெயினனார் குறிப்பில் திருமால் பாட்டில் எல்லாமாக இறைவன் திருமால் அமைந்துள்ள சிறப்பை எடுத்துரைத்துள்ளார். அறிதற்கு அரிய பெருமையுடையவன் என்றும் திருமாலே என்று நேர்முகமாகவும் விளித்துப் பாடி உன்னிடமிருந்தே எல்லாப் பொருள்களும் பெருகின என்றும் குறிப்பிட்டுள்ளார். உனக்கு ஊர்தியும் கொடியும் கருடனே என்றும் பன்றியும் அன்னமுமாகத் தோன்றிப் பல இன்னல்களைக் களைந்தவன் என்ற சிறப்பும் உனக்குத்தான் உண்டு. உன் உருவமும் பெயரும் அளவில்லாதன என்பதையும் எடுத்துரைத்துள்ளார். ஐம்பூதங்களின் தத்துவ வடிவம் திருமால்தான் என்றும் பல்வகைத் திறமைகள் கொண்டு காக்கும் கடவுளாய் என்றும் விளங்குகிறாய் என்றும் குறிப்பிட்டுள்ள கருத்து எண்ணத்தக்கது. இப்பாட்டில் 'மணி'[6] - நீலமணி, 'பூண்'[7]- அணிகலன், 'சங்கு' 'நேமின் சக்கரம்'[8] போன்ற கருவிகளை வெளிப்படுத்தியுள்ளமை கருதத்தக்கது. நான்காவது பாட்டிலும் 'நேமி'[9] என்ற சக்கரம் மொழியப்பட்டுள்ளது. அருளாளர்களின் வழிபாட்டுணர்வு மேலோங்கிய நிலையில் திருமாலின் உறுப்புப் புனைவும் முக்கிய இடம்பெற்றுள்ளது. நரசிங்க அவதாரம் குறித்தும் பேசியுள்ளார். வராக

அவதாரம் பற்றியும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கருடக் கொடியின் சிறப்பு, எல்லாம் வல்ல இறைவன் திருமாலே என்று பாடலை முடித்துள்ள தன்மை எண்ணத்தக்கது.

நல்லெழுநியார் என்னும் புலவர் பாடிய திருமால் பாட்டில் திருமால், பல உருவங்களில் தோன்றினாலும் முழு முதல் கடவுளாய் இலங்கும் தகுதியைக் காண வைத்துள்ளார். அவருடைய மேனி, மொழி என்பன புகழுக்குரியன என்று அவனுடைய திருவடியை வாழ்த்தி வணங்குவதொன்றே எனக்கு விருப்பம் என்பதைத் தெரிவித்துள்ளார். 'மணி'[10]- நீலமணி, 'புனைமுடி'[11]- கிரீடம், 'புள்ளுக்கொடி'[12] - கருடக்கொடி, 'கருவி'[13] - பொறி ஆகியன இடம்பெற்றுள்ளன.

திருமால் குறித்த பதினைந்தாவது பாடலைப் பாடிய இளம்பெருவழுதியார் திருமாலிருங்குன்றச் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளார். இது அழகர் மலை என அழைக்கப்படுகிறது. இது குறித்து சாமி சிதம்பரனார் தரும் கருத்து எண்ணத்தக்கது. **"திருமாலிருங்குன்றம் மிகப் பழங்காலத்திலிருந்தே திருமால் வாழும் திருப்பதியாகவே இருந்து வருகின்றது. சிலர் சொல்வதுபோல அது ஒரு காலத்தில் முருகவேள் குன்றாக இருந்தது. பின்னால் திருமால் குன்றாக மாறியது என்பதற்குச் சங்க இலக்கியங்களிலே ஆதரவில்லை. திருமுருகாற்றுப்படையிலே உள்ள பழமுதிர்ச்சோலையைத் திருமாலிருஞ்சோலையென்று கூறுகின்றனர் சிலர். அந்தத் திருமுருகாற்றுப் படையும் இந்தப் பரிபாட்டும் கடைச் சங்கத்துப் பாடல்கள், திருமுருகாற்றுப் படை தோன்றிய காலத்தில் திருமாலிருஞ்சோலை வைணவத் திருப்பதியாகவே இருந்தது என்பதில் ஐயமில்லை."[14]**

எவ்வாறாயினும் திருமால் குன்றில் இருந்த நிகழ்வு பரிபாடலில் இடம்பெற்றுள்ளது. இதில் 'குழல்'[15]- புல்லாங்குழல், 'பாண்டில்'[16] - தாளம், 'முழவு'[17] - மத்தளம், 'நாஞ்சில்'[18] - உழவுக்கருவி கலப்பை, 'வலம்புரி'[19] - சங்கு, 'நேமி'[20] சக்கரம், 'சிலை'[21] - வில் என்பன கருவிகளாக இடம்பெற்றுளன.

## செவ்வேள் பாடல்களில் கருவிகள்

பரிபாடலில் செவ்வேள் குறித்து எட்டுப்பாடல்கள் இடம்பெற்றுள்ள. அவற்றுள் ஏழு பாடல்கள் திருப்பரங்குன்றத்தைப் பாடுவதாக உள்ளன. திருப்பரங்குன்றம் இமயமலைக்கு நிகரானது என்ற பெருமையை உரைக்கும் நூல் பரிபாடல். தொல்காப்பியர் காலத்தில் குறிஞ்சி நிலத் தெய்வமாக இருந்த சேயோன் சங்க காலத்தே நிலங் கடந்த பெருங்கடவுளாக எல்லா நிலத்தினராலும் போற்றப்பெற்றார். செவ்வேளைப் பற்றி கடுவன் இளவெயினனார், நல்லந்துவனார் குன்றம் பூதனார், கேசவனார், நல்லழிசியார். நப்பண்ணனார். நல்லச்சுதனார் பாடியுள்ளனர். பாடல்களில் செவ்வேளின் உறுப்புப் புனைவு, ஆடை, அணிகலன், கொடி, மாட்சிமை, பகைவரை அழித்தல், அன்பர் வழிபாடு, வரம் வேண்டுதல் என்பன இடம்பெற்றுள்ளன. திருப்பரங்குன்றத்தின் இயற்கை அழகு, கோயில் ஓவியங்கள், காதல், ஊடல் நிகழ்ச்சிகளும் இதனுள் இடம்பெற்றுள்ளன. திருமுருகாற்றுப்படை நக்கீரரால் பாடப்பட்டது. இந்த இலக்கியத்திற்கும் பரிபாடல் இலக்கியத்திற்கும் உள்ள சிறப்பை விளக்கும் இரா. சாரங்கபாணியார், **"முருகாற்றுப் படை ஆறு படை வீடுகளின் சிறப்பைப் பாட, பரிபாடல் பரங்குன்று ஒன்றையே பாடும். பழமுதிர்சோலை முருகனுக்குரியதாக ஆற்றுப்படை கூற, பரிபாடல் திருமாலுக்குரியதாகக் கூறும். ஆற்றுப்படை முருகனுக்கு ஊர்தியாக ஆட்டினையும் கூறும். இச்செய்தி பரிபாடலில் இல்லை. முருகனுக்குரிய படைக்கருவிகளை வழங்கியவர் யாவர் என்ற செய்தி பரிபாடலில்தான் காணப்படுகிறது. வள்ளி தெய்வயானை சண்டையிடுதல், முருகன் ஊடல் தீர்த்தம், மகளிர் முருகன் ஊர்தியாகிய யானையின் கவழ மிச்சிலை உண்ணுதல் இவற்றைப் பரிபாடலே கூறுகிறது. செவ்வேள், மால், முருகன் என்னும் பெயர்களும் பரிபாடலிலே தான் காணப்பெறுகின்றன. முருகனின் ஆறு தலைகள் அறிவிக்கின்றது."[22]** இவ்வாறு பரிபாடலின் தொன்மை, ஆற்றுப்படையில் அமைந்த அமையாத நிகழ்வுகளின் அடிப்படையில் பரிபாடலில் அமைந்த கருவியம் குறித்து எண்ணுவாம்.

'வச்சிரம்'[23] - வச்சிரப்படை, 'உருள்'[24] - தேர்ச்சக்கரம் என்பன செவ்வேள் ஐந்தாம் பாடலால் அறியமுடிகின்றது. 'சாமம்' - வில், 'மரன்' - தோமரம், வாள், ஈட்டி, 'குடாரி' - கோடரி, 'கணிச்சி' - குந்தாலி, 'கனலி' - மழு என்ற கருவிகளை முருகன் பன்னிரு கைகளிலும் வைத்திருந்த நிகழ்வைப் பதிவு செய்துள்ளார்.[25]

நல்லந்துவனாரின் செவ்வேள் பாட்டில், 'வங்கியம்' - குழல், 'தொடி' - வளையல், 'மணிமுரசு' போன்ற கருவிகள் இடம்பெற்றுள்ளன.[26]

"குன்றம் பூதனார் வெளிப்படுத்தும் கருவியில் 'மணி மிடறு' - நீலமணி, 'கண்ணி' - தலைமாலை, 'வார்' - கச்சு, 'மத்திசை' - சாட்டை, 'நரம்பு' - யாழ், 'படாகை' - பெரிய கொடி, என்பன இடம்பெற்றுள்ளமை முருகனின் பரங்குன்றச் சிறப்போடு காணப்படுகின்றது"[27] செவ்வேள் குறித்த பதினான்காவது பாடலில் ''பவழம்"28 என்ற அணிகலக் கருவி இடம்பெற்றுள்ளது. நல்லழிசியார் பாடலில் 'இயல், ''முடிவு"29 என்ற கருவிகள் இடம்பெற்றுள்ளன. 'வட்டு' சூதாடு கருவி, 'பகழி' - அம்பு, 'வில்' - சூதாடு கருவி என்பன இடம்பெற்றுள்ளன.[30]

நப்பண்ணனார் 'பிரமம்' - வீணை, 'கூரம்' - யாழ், 'நேமி' - சக்கரம், 'முரசு' [31] என்பனவற்றை வெளிப்படுத்தி கருவிகளின் பெயர்களைப் புலப்படுத்தியுள்ளார்.

நல்லச்சுதனார், 'நெகிழம்' சிலம்பு, 'அரி' - பரற்கல், 'துடி' - உடுக்கை, 'எஃகு' - வேல், 'சாந்தாற்றி' - ஆலவட்டம் என்ற விசிறி, 'தூம்பு' - புல்லாங்குழல், 'பாணி' - தாளம், 'வட்டம்' - விளையாட்டுக்கருவி, 'உருள்' - சக்கரம், 'அடர்' - பொன் தகடு, 'துகில்' - ஆடை, 'துடி' - உடுக்கை, 'வாளி' - அம்பு, என்பனவற்றைப் பயன்படுத்தியுள்ளமை அறியத்தக்கது.[32]

## வையைப்பாடல்களில் கருவியம்

வையையில் இற்பரத்தை, காதற்பரத்தையுடன் நீராடிய தலைவன் செயல். நீர் விழணியின் செய்திகள் உரைக்கப்பட்டுள்ளன. இதில் 'தொடி' வளையல் 'ஈரணி' - புனலாட்டுக்குரிய அணி, 'மிதவை' - தெப்பம் போன்றவற்றை நல்லந்துவனார் வெளிப்படுத்தியுள்ளார்.[33]

மையோடக்கோவனார் குறிப்பிடும் பாட்டில் 'படி' - பறை, 'ஆழி' - மோதிரம், 'நாணால்' - கயிறு, 'முழவு' - மத்தளம், 'குழல்' - புல்லாங்குழல் என்பன பதிவாகியுள்ளன.[34] கருப்பிள்ளைப் பூதனார், 'தாளிதம்' - மிதியடி, ஏணிப்படுகால் மேகலை, 'மூஉய்' - பெட்டி, 'இயம்' - வாத்தியக் கருவி, 'மாடம்' - ஓடம், 'கணிச்சி' - கோடாரி, 'திமில்' - படகு, 'பகழி' - அம்பு, 'எஃகு' - வேல், 'தோளணி' - வாகுலயம், போன்ற பொருட்கருவிகள் இடம்பெற்றுள்ளன.[35]

வையை பதினோறாவது பாடலில், குழல், முழவு, மத்தர், தண்ணுமை, மகுளி போன்ற இசைக்கருவிகளும் 'புட்டகம்' - சேலை, 'கட்டுவடம்' - அணி, 'கழலினர்' - காலாழி, 'வடிமணி' - ஓசைமணி, 'தொடி' - வளையல் போன்றவையும் இடம்பெற்றுள்ளன.[36] நல்லழிசியார் பாட்டில், 'சுடுங்கை' - மூங்கிலால் செய்யப்பட்ட பீச்சங்குழல் என்ற இசைக்கருவி இடம்பெற்றுள்ளது.[37] வையை இருபதாவது பாடலில், 'வங்கம்' - வண்டி, 'வாளி' - அம்பு, 'நாஞ்சில்' - கலப்பை, 'பூண்' - அணிகலன் போன்றவை இடம்பெற்றுள்ளன.[38] வையை இருபத்தி இரண்டாம் பாடலில், ஒளிறுவாள்-எறிவன, எக்குவன போன்ற கருவிகளும் போர்க்கருவிகளாக உள்ளமையும் அறியத்தக்கது.

## முடிவுரை

பரிபாடல் முத்திறத்து வெளிப்பாட்டில் அமைந்து திருமால், செவ்வேள், வையை ஆகியவற்றின் பெருமைகளை உரைத்து வரலாறு கண்ட நூல். ஒவ்வொரு பாடலிலும் பாடுபொருண்மைக்கு ஏற்ப கருவிகளின் தகவமைப்பைப் புலவர்கள் இயைத்துப் பாடியுள்ளமையும் அவற்றின் செயலூக்கத்தின் தன்மையையும் மரபுசார்ந்து மொழிந்துள்ளார். அவர் சுட்டிச் சென்றுள்ள பல கருவிகளின் பெயர்கள் இன்று வழக்கத்தில் மறைந்து போயிற்று. அவற்றை மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சியே இக்கட்டுரையாக்கம்.

## குறிப்பெண் விளக்கம்

1. பரிபாடல், 1-3.
2. மேலது, 1-8.
3. மேலது, 1-58.
4. மேலது, 2-19
5. மேலது, 2-40.
6. மேலது, 3-3.
7. மேலது, 3-53.
8. மேலது, 3-94.
9. மேலது, 4-9.
10. மேலது, 13-1.
11. மேலது, 13-2.
12. மேலது, 13-4.
13. மேலது, 13-10.
14. சாமி சிதம்பரனார், எட்டுத் தொகையும், தமிழர் பண்பாடும்,பக்.152-153.
15. பரிபாடல், 15-42-43.
16. மேலது.
17. மேலது.
18. மேலது, 15-57-61.
19. மேலது.
20. மேலது.
21. மேலது.
22. இரா.சாரங்கபாணி (உரை), பரிபாடல் மூலமும் உரையும்.
23. பரிபாடல், 5-51-52.
24. மேலது.
25. மேலது, 5-65-70.
26. மேலது, 8-100
27. மேலது, 9-7, 46, 54, 78.
28. மேலது. 14-16
29. மேலது, 17, 11, 13.
30. மேலது, 11, 36, 39, 40.
31. மேலது, 19-40, 44, 46.
32. மேலது, 21.
33. பரிபாடல், வையை, பா.எண்.6.
34. மேலது, பா.எண்.7.
35. மேலது, பா.எண்.11
36. மேலது, பா.எண்.16
37. மேலது, பா.எண். 16-20.
38. மேலது, பா.ண்.20.

## துணை நூற்பட்டியல்


1. இரா, சாரங்கபாணி, உரையாசிரியர். *சங்க இலக்கியம் பரிபாடல் மூலமும் உரையும்*. சென்னை, வர்த்தமானன் பதிப்பகம், 2022.
2. சாமி, சிதம்பரனார். *எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும்*. சென்னை, அறிவுப் பதிப்பகம், 2003.


## References


1. R, Carankapani, Text Editor. *Sanga Ilakkiyam Paripadal Mulamum Uraiyum*. Chennai, Varthamanan Publications, 2022.
2. Sami, Chidambaranar. *Ettu Thohaiyum Thamizhar Panpadum*. Chennai, Arivu Publications, 2003.


**How to cite this article:** T, Nellaiyappan. "Devices used in Paripaadal". *Aazhi International Journal of Tamil Literature Studies*, vol. 1, no. 1, Jan. 2023, pp. 4-7, https://aijtls.com/index.php/aijtls/article/view/2.

This is an open access journal, and articles are distributed under the terms of the Creative Commons Attribution-Non Commercial-ShareAlike 4.0 International License, which allows others to remix, tweak, and build upon the work non-commercially, as long as appropriate credit is given and the new creations are licensed under the identical terms.